**தலைப்பு 287 – காணி உரிமைகளை நிர்ணயித்தல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை.**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன காணி உரிமைகளை நிர்ணயித்தல் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 287 – காணி உரிமைகளை நிர்ணயித்தல் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக காணி உரிமைகளை நிர்ணயித்தல் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் அட்டவணையில் பொழிப்பாக்கித் தரப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப் பொறுப்பு. | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடக்காமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத்தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | (i) | திட்டங்களை தயாரிப்பதிலுள்ள குறைபாடுகள் | 2.2.1 |
| | | (ii) | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை | 2.2.2 |
| | | (iii) | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.3.1 |
| | | (iv) | பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.3.2 |
| | | (v) | நடைமுறைச் சாத்தியமாக பாதீடு தயாரிக்கப்படாமை | 2.6 |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் | (i) | பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை | 2.8 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும். | (ii) | இணக்கமின்மைகள் | 2.9 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும், | | சொத்துக்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.4 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிலுள்ள நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யாமை | 2.7 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் செயற்பாடாகிய வெளிக்கள புலனாய்வுகளை நடாத்துதல், உரிமையை பதிவுசெய்யும் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரிசுரித்தல், காணிப் பதிவாளர் விசாரணைகளை நடாத்துதல், உரிமைகளைப் பதிவு செய்யும் அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரித்தல், பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் என்பன தொடர்பாக 2017 ஆம் ஆண்டிற்கான

இலக்குகளை 2016 ஆம் ஆண்டிற்கான இலக்குகளுடன் ஒப்பீடு செய்த போது 54 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தமை திட்டமிடல் பலவீனம் என அவதானிக்கப்பட்டது.

### 2.1.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒரு ஒருங்கிணைந்த முறைமையைத் (Integrated System) தோற்றுவிப்பதற்காக ரூபா 08 மில்லியன் நிதிஏற்பாடு திட்டமிடப்பட்டிருந்தும் திட்டமிடப்பட்டவாறு அதனை தோற்றுவிப்பதற்கு முடியாதிருந்தது.

(ii) காணி நிர்ணய கட்டளைச்சட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் நிலஅளவை செய்து ஒதுக்கீடு செய்தல், பரீட்சித்தல் இலக்கு 21 கிராமங்களாக இருந்தும் 14 கிராமங்கள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிம்சவிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்ற 57 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய 3659 கிராம சேவையாளர் பிரிவுகளில் 1374 கிராம சேவையாளர் பிரிவுகளில் மாத்திரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அது மொத்த எண்ணிக்கையில் 38 சதவீதமாக இருந்தது.

(ii) உரிமைப் பிணக்குகள், எல்லைகள் தொடர்பான பிணக்குகள், நுழைவு வீதிகள் தொடர்பான பிணக்குகள் முதலிய பல்வேறு காரணங்களால் காணிகளை நிர்ணயிக்கும் செயற்பாட்டுக்கு மத்தியில் கோவைகள் பிற்படுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அவ்வாறு பிற்படுத்திவைக்கப்பட்ட கோவைகள் 392,456 ஆக இருந்தது. தொடர்ச்சியாக இந்த நிலைமை அதிகரித்து வந்ததன் காரணமாக தீர்த்துவைத்தல் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதும் தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழச்சி நிரலின்'' பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு தொடர்பாக திணைக்களத்தினால் தமது நோக்க எல்லைக்குள் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2 பெறுகைகளைத் திட்டமிடல்**

2.2.1 திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 9.70 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 9.67 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகள் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 2017 யூலை 31 ஆந் திகதியில் உள்ளவாறான திருத்திய பெறுகைத் திட்டத்தில் 06 கணனி கதிரைகளைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 02 கதிரைகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 02 கதிரைகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 02 Hoover இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் ஒரு இயந்திரம் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. Hoover இயந்திரங்களைக் கொள்வனவு செய்த போது விலைகளின் பாதகமான முரண் ரூபா 53,490 அதாவது 178 சதவீதமாகும்.

**2.2.2 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்தல்**

ரூபா 36.4 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் உரிமை நிர்ணய ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய ஒப்பந்தகாரருக்கு அது 2016 மார்ச் 10 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்த காணியின் சட்டரீதியான உரிமை திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கட்டிடத் திணைக்களத்துடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டுப் பணத்தில் 50 சதவீதமான முற்பணம் உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டதன் பின்னர் செலுத்தக்கூடியதாக இருந்தும் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு 40 நாட்களுக்கு முன்னர் ரூபா 10 மில்லியன் கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) 2016 திசெம்பர் 08 ஆந் திகதியளவில் இந்த உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 மே 1 ஆந் திகதிவரை மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட 06 நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தும் 2016 நவம்பர் 30 ஆந் திகதியளவில் மதிப்பீடு செய்யப்பட்ட முழுப்பணமாகிய ரூபா 36.4 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வாகனங்களை திருத்தம் செய்தல்**

இரண்டு கெப் வாகனங்களைத் திருத்தம் செய்யும் போது சாரதிகளால் தெரிவிக்கப்பட்டிருந்த பிழைகள் மற்றும் திருத்தங்கள் செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டு அவ்விலை மனுக்கள் இயந்திரப் பொறியியலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எந்த நிறுவனத்திடமிருந்து திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்

என்பதற்கு இயந்திரப் பொறியியலாளரினூடாக சிபார்சுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் இயந்திரப் பொறியியலாளரால் உரிய பழுதுகள் பரீட்சிக்கப்பட்டு சிபார்சு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த இரண்டு வாகனங்களும் திருத்தம் செய்யப்பட்ட பின்னரும் பரீட்சிக்கப்படாது இயந்திரப் பொறியியலாளரால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) அலுவலகத்தைப் பராமரித்தல் செலவுகள்**

-----------------------------------------------------------------------------

திணைக்களத்திற்குச் சொந்தமாக 4 கட்டிடங்கள் காணப்படுவதுடன் இதற்கு மேலதிகமாக வருடாந்தம் ரூபா 16,450,500 வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களிலும் அலுவலக செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. வருடாந்த சுத்தகரிப்பு கட்டணம் ரூபா 1,568,640 ஆக இருந்ததுடன், பாதுகாப்புச் சேவைக் கட்டணம் ரூபா 19,617,275 ஆகும். அதற்கிணங்க முழுக் கட்டிடங்களுக்குமான செலவு ரூபா 37,636,415 ஆக இருந்தது. அதற்கிணங்க, ஒரு தனிநபருக்கான அலுவலகத்தை பராமரித்தல் செலவு ரூபா 54,466 ஆக இருந்தது.

திணைக்களத்தின் 04 பிரதேச அலுவலகங்களுக்காக வாடகை அடிப்படையில் கட்டிடங்களைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) பிரதேச அலுவலகங்களுக்காக கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஒழுங்கு விதிகளைப் பின்பற்றாது பிரதேச அலுவலகங்களுக்குப் பொறுப்பான உதவி / பிரதி ஆணையாளரால் பொருத்தமானது என சிபார்சு செய்யப்பட்ட கட்டிடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(ii) கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தின் போது பத்திரிகை அறிவித்தல்களைப் பிரசுரித்து விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கட்டிடங்களை மீள ஒப்படைக்கும் போது திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்த 2014 யூலை 21 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) கங்கவட்ட கோரலே பிராந்திய அலுவலகத்தை புதிய அலுவலக கட்டிடத்திற்கு கொண்டு செல்வதற்குரிய பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் இரண்டு ஆண்டுகள் காலத்திற்காக 2016 மே 05 ஆந் திகதி குத்தகை உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு கடமைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஒரு ஆண்டு காலத்திற்கான குத்தகை உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு பெறுகைக் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

-----------------------------------------------------------------------------

காணி அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 27 மில்லியன் பெறுமதியான 07 மோட்டார் வாகனங்கள் 09 ஆண்டுகளிலிருந்து 14 ஆண்டுகள் வரையான காலம் திணைக்களத்தால் முறையான அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

மொறட்டுவ அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் நில அளவை நடவடிக்கை 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் அதன் உரிமைகளைப் பதிவு செய்யும் நடைமுறைகளின் மிகுதிச் செயற்பாடுகள் மீளாய்வாண்டு இறுதிவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.5 கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதிஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 200.59 | 200.26 | 0.33 | 0.16 |
| | மூலதனம் | 5.70 | 4.24 | 1.46 | 25.61 |
| | **மொத்தம்** | **206.29** | **204.50** | **1.79** | **0.87** |
| 2014 | மீண்டெழுபவை | 295.18 | 293.71 | 1.47 | 0.50 |
| | மூலதனம் | 12.90 | 12.03 | 0.87 | 6.74 |
| | **மொத்தம்** | **308.08** | **305.74** | **2.34** | **0.76** |
| 2015 | மீண்டெழுபவை | 377.80 | 369.87 | 7.93 | 2.10 |
| | மூலதனம் | 22.50 | 19.12 | 3.38 | 15.02 |
| | **மொத்தம்** | **400.30** | **388.99** | **11.31** | **2.82** |
| 2016 | மீண்டெழுபவை | 385.61 | 379.50 | 6.11 | 1.58 |
| | மூலதனம் | 37.40 | 36.74 | 0.66 | 1.76 |
| | **மொத்தம்** | **423.01** | **416.24** | **6.77** | **1.60** |
| 2017 | மீண்டெழுபவை | 386.38 | 379.83 | 6.55 | 1.69 |
| | மூலதனம் | 15.00 | 6.36 | 8.64 | 57.6 |
| | **மொத்தம்** | **401.38** | **386.19** | **15.19** | **3.78** |

கீழே தரப்பட்டுள்ள காரணங்களால் பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(i) மூலதனச் செலவு விடயத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 8,500,000 தொகையும் 02 மூலதனச் செலவுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 738,668 நிதிஏற்பாடும் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) ஒரு மூலதனச் செலவு விடயத்திற்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்ட ரூபா 100,000 தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 28701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழேதரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 24.00 | 22.60 | 15.00 | 16.10 | 67.00 | 49.40 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 545,954 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ஒரு ஆண்டிலிருந்து 09 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாக காணப்பட்டு வந்த போதிலும், அவற்றினை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

## 2.7 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனங்களை பட்டியல்படுத்தும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | சேதங்கள் இடம்பெற்ற உடன் தொடக்க அறிக்கையும் 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும், 2017 நவம்பர் 07 ஆந் திகதி விபத்துக்குள்ளான வாகனத்தின் தொடக்க மற்றும் முழுமையான அறிக்கைகளும் 2017 நவம்பர் 30 ஆந் திகதி விபத்துக்குள்ளான வாகனத்தின் முழுமையான அறிக்கையும் 2018 மார்ச் 15 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்கு பின்னர் 12 மாதங்களுக்கு பின் அல்லது 25,000 கிலோமீற்றர்கள் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் சம்பந்தமான பிரதான திருத்தங்களின் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் தொடக்கத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் திணைக்களத்தின் 06 வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2017 யூன் 28 ஆந் திகதிய 1.2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பான தகவல்கள் 2017 செப்தெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் கொம்ப்ட்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையும் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.9.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு

திணைக்களத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 356.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனிநபர் செலவு ரூபா 440,721 ஆகும்.

| **ஊழியர் வகை** | | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் பதவியணியினர்** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 107 | 43 | 6 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 07 | 05 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1746 | 609 | 1137 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 254 | 151 | 103 |
| (v) | அமையம் / தற்காலிகம் | 126 | - | 126 |
| | **மொத்தம்** | **2240** | **808** | **1432** |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிரந்தர பதவியணியிலுள்ள பிரதி மற்றும் உதவி ஆணையாளர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 80 ஆகக் காணப்பட்டதன் காரணமாக பிராந்திய அலுவலகங்களின் செயலாற்றல் தொடர்பாக தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 90 பிராந்திய அலுவலகங்களை செயற்படுத்துவதற்காக பதவியணியினர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் தற்பொழுது 43 பிராந்திய அலுவலகங்கள் மாத்திரம் செயற்பட்டு வருவதனால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை வெற்றிடங்கள் அதிக அளவில் காணப்படுவதற்கு காரணமாக இருந்தது.